செ.வெ.எண்: 08 நாள்: 02.12.2016

# புதுக்கோட்டை நகராட்சியில் ரூ.9.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை நகராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.12.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி புதுக்கோட்டை நகராட்சி, காந்திநகர் அருகிலுள்ள நகராட்சி குப்பைகிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.7.9 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உரம் தயாரிக்கும் இயந்திரம் கட்டுமானப் பணியையும், அடப்பன்குளத்தில் இடைவெளி நிரப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.1.25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் குளம் சீரமைக்கும் பணியையும் என மொத்தம் ரூ.9.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப்பணிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

புதுக்கோட்டை நகராட்சியில் தினமும் 70 டன் குப்பைகள் மக்கும் குப்பை, மக்கா குப்பை என தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கப்பட்டு நகராட்சி குப்பைக்கிடங்கிற்கு கொண்டு வரப்பட்டு உரம் தயாரிக்கும் இயந்திரத்தின் மூலம் உரம் தயார் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு குறைவான விலையில் வழங்கப்படவுள்ளது. மேலும் அடப்பன்குளம் 22 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இக்குளத்திற்கு 4 வரத்துவாரிகள் மூலம் மழைநீர் வரப்பெறுவதுடன் ஒரு வரத்துவாரி வழியாக நீர் வெளியேறும். இதன் அனைத்து கரையோரங்களிலும் கற்கள் பதிக்கப்பட்டு கரைகள் பலப்படுத்தப்பட்டு மழைநீர் குளத்திற்கு பாதுகாப்பாக வந்து வெளியேறும் வகையில் 5 பாலங்கள் அமைக்கப்பட்டும், கரையின் மேற்பகுதியில் பொதுமக்கள் தினமும் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் வகையில் நடைபாதையும் அமைக்கப்படவுள்ளது.

மேலும் இந்த ஆய்வின் போது குளத்தில் உள்ள தேவையற்ற செடி, கொடிகள் போன்றவற்றை முழுவதுமாக நீக்கி சீரமைத்து பணிகளை மேற்கொள்ளவும், நடைபெறும் பணிகளை தரமான கட்டுமானப்பொருட்களை கொண்டு விரைவாக கட்டி முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வில் நகராட்சி ஆணையர் (பொ) திரு.ராஜாராம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**